பதவி நாற்காலி காலியாகப் போகும் இறுதிக் கட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வந்து

தி.மு.க.வுக்கு பிரதமர் மோடி சவால் விடுவதா?

கடந்த கால அரசியல் வரலாற்றை மறந்து விடாதீர்!
கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. எச்சரிக்கை!

சென்னை, மார்ச் 1 -

"பதவி நாற்காலி காலியாகப் போகும் இறுதிக் கட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வந்து பிரதமர் மோடி தி.மு.க.வுக்கு சவால் விடுவதா?" என்று கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் அறிக்கை வருமாறு:-

அரசுமுறைப் பயணமாகத் தமிழ்நாட்டுக்கு வந்து, அரசியல் பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு, தாம் பிரதமர் என்பதையே மறந்து, அரசியல் அவதூறுகளை அள்ளி இறைத்துவிட்டுப் போயிருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள். அவரது உரையைப் பார்த்தபோது, அவரை நினைத்துப் பரிதாபமாக இருந்தது. பதவி நாற்காலி காலியாகப் போகும் இறுதிக் கட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வந்து அவர் முறுக்கி, முறுக்கி பேசத் தொடங்கி இருக்கிறார்.

தமிழ்நாட்டுக்கு இந்தப் பத்தாண்டு காலத்தில் செய்த சாதனைகளைப் பட்டியலிட்டிருந்தால் அவரைப் பாராட்டலாம். பத்தாண்டு காலத்தில் இந்திய நாட்டுக்குச் செய்து காட்டிய வளர்ச்சியைச் சொல்லி இருந்தால் வரவேற்கலாம். அப்படி எதுவும் இல்லாததால், திருப்பூர் கூட்டத்தில் ஜெயலலிதாவை வானளாவப் புகழ்ந்தும், திருநெல்வேலி கூட்டத்தில் தி.மு.க.வைக் கடுமையாக விமர்சித்தும் பேசிவிட்டுப் போயிருக்கிறார் பிரதமர்.

பிரதமர் பேச்சு பொதுமக்கள் கிண்டல்!

பா.ஜ.க. ஆட்சியைக் கவிழ்த்தவர் ஜெயலலிதா. ஊழல் வழக்கில் தண்டனை பெற்று இரண்டு முறை தமிழ்நாட்டின் முதலமைச்சர் பதவி பறிக்கப்பட்டவர் ஜெயலலிதா. நான்காண்டு சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபாய் அபராதமும் பெங்களூரு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டு பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப்பட்டவர் ஜெயலலிதா. அப்படிப்பட்ட ஜெயலலிதா, தமிழ்நாட்டில் சிறப்பான ஆட்சியைக் கொடுத்ததாகப் பிரதமர் பேசியிருப்பதைப் பார்த்துத் தமிழ்நாட்டு மக்கள் சிரிக்கிறார்கள். மோடி நிலைமை இந்தளவுக்குப் போய்விட்டதே என்று கேலி செய்கிறார்கள். "பதவிக்காக எந்தளவுக்குத் தரைக்கு இறங்கிவிட்டார் பிரதமர்" என்று கிண்டல் அடிக்கிறார்கள்.

பல்லடத்தில் பல்டி அடித்த மோடி!

2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, ஜெயலலிதா ஆட்சியைப் பற்றி, 'தமிழ்நாட்டில் லஞ்ச லாவண்யம் தலை விரித்தாடுகிறது. இந்த லஞ்சத்தினால் தமிழ் நாடே முற்றிலும் பாதித்துப் போய் இருக்கிறது' என ஓசூரில் நின்று கடுமையாக விமர்சித்த மோடிதான், இன்றைக்குப் பல்லடத்தில் பல்டி அடித்திருக்கிறார்.

2014ஆம் ஆண்டு தன்னை குஜராத் மாநிலத்தின் வளர்ச்சி நாயகனாகக் காட்டிக் கொண்ட நரேந்திரமோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். அப்போது, தமிழ் நாட்டைவிட குஜராத் எந்த வகையில் வளர்ந்துவிட்டது என்று சொல்லி, 'மோடியா? இந்த லேடியா?' என்று கேட்டவர் ஜெயலலிதா. அத்தகைய மோடி இன்று புகழ்வதைப் பார்த்து என்ன சொல்வது? ஜெயலலிதாவை வைத்து, தமிழ்நாட்டில் ஓட்டு வாங்க நினைக்கிறார் மோடி. அவரிடம் சொந்தச் சரக்கு ஏதுமில்லை என்பதற்கு இதுவே சான்று.

மோடியின் கோபத்திற்கு இதுதான் காரணம்!

தி.மு.க. அரசைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார் பிரதமர். தி.மு.க மீதும், அதன் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீதும் பிரதமருக்கு இவ்வளவு கோபம் ஏன் என்பது புரிந்து கொள்ள முடியாதது அல்ல. தனக்கு எதிரியே இல்லை என்ற இறுமாப்பில் இருந்த பா.ஜ.க.வுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் அனைத்தையும் இணைத்து 'இந்தியா' கூட்டணி அமைக்க அடித்தளம் அமைத்தவர் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பது தான் பிரதமர் மோடியின் கோபத்துக்குக் காரணம்.

மோடி ஏதோ சாதித்து விட்டாராம், அவரது சாதனையைத் தமிழ்நாட்டில் தி.மு.க மறைக்கிறதாம். இப்படி புலம்பி இருக்கிறார் பிரதமர். அவர் எந்தப் பகுதியில் பேசினாரோ அந்தப் பகுதியின் தொழில் வளத்தையே சிதைத்தது ஒன்றிய பா.ஜ.க அரசுதான்.

பின்னலாடை வர்த்தகச் சந்தைக்கான வாசலை வங்கதேசத்துக்குத் திறந்துவிட்டு, திருப்பூரை வஞ்சித்த மோடி, கொங்கு மண்ணின் பெருமையை எப்படிப் பேச முடிகிறது? வங்கதேசத்துக்குப் பின்னலாடை மூலப் பொருட்கள் 60 விழுக்காடு இந்தியாவில் இருந்துதான் இறக்குமதி செய்யப்படுகின்றன. அங்கே உற்பத்தியாகும் துணி இந்தியாவிற்கே விற்கப்படுகிறது. வங்கதேச மண்ணுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்த மோடி அரசு, திருப்பூருக்குச் செய்தது அநீதிதானே! பின்னலாடை வர்த்தகத்தை நசுக்கிவிட்டு, "தொழில்துறையில் கொங்கு மண் முக்கியப் பங்காற்றுகிறது" எனக் கூசாமல் பொய் சொல்கிறார்.

இந்தியா முழுமைக்கும் தி.மு.க. திட்டங்கள்!

"காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. அங்கம் வகித்தபோது தமிழ்நாட்டிற்கு ஒன்றும் செய்யவில்லை" எனப் பேசியிருக்கிறார் பிரதமர் மோடி. 2004 - மார்ச் 2013 வரை டாக்டர் மன்மோகன் சிங் ஆட்சியில் அங்கம் வகித்தபோது தமிழ்நாட்டிற்கு தி.மு.க கொண்டு வந்த திட்டங்கள் என்னென்ன? எனப் பிரதமர் தன்னிடம் இருக்கும் ஏஜென்சிகளிடம் கேட்டிருந்தால், சொல்லியிருப்பார்களே! சி.பி.ஐ, வருமானவரித் துறை, அமலாக்கத் துறை, என்.ஐ.ஏ., ஐ.பி என அதிகார அமைப்புகள் எல்லாம் பா.ஜ.க.வுக்குச் சேவை செய்யவே நேரம் போதவில்லையே!

மோடிக்கு கூச்சமாக இல்லையா?

தமிழ் செம்மொழி பிரகடனம், மிகப் பெரிய போக்குவரத்து மேம்பாலங்கள், சேலத்தில் புதிய இரயில்வே கோட்டம், தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ ஆய்வு மையம், சேலம் அரசினர் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவக் கல்லூரியாக மேம்பாடு, திருவாரூரில் மத்தியப் பல்கலைக் கழகம், சென்னையில் கடல்சார் தேசிய பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே முதல் முறையாக வளர்ந்த நாடுகளுக்கு இணையான 3ஜி தகவல் தொழில்நுட்பத் திட்டம் 50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி என ஒன்பதாண்டு காலத்தில் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் பல திட்டங்களைத் தி.மு.க கொண்டு வந்தது.

இத்தகைய சிறப்புத் திட்டம் ஏதாவது தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க அரசு கொண்டு வந்ததாகப் பட்டியல் போட முடியுமா? ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனை 2015ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டு பிரதமர் மோடியால் ஒரு செங்கல் வைக்கப்பட்டது. மறு செங்கல் இதுவரை வைக்கப்படவில்லை. 2024 மே மாதத்துக்குப் பிறகு பதவியேற்கும் புதிய பிரதமர்தான் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையைக் கட்டப் போகிறார். வீட்டில் இருந்தபடி மோடி அதனைப் பார்க்கப் போகிறார். மதுரையில் ஒரே ஒரு எய்ம்ஸ் கூட திறக்க முடியாத உங்களால் மதுரைக்கு எப்படி வர முடிகிறது? கூச்சமாக இல்லையா?

கூச்சமே இன்றி மோடி வருகை!

பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஒரு பைசாவைக்கூடத் தமிழ்நாட்டிற்குத் தரவில்லை. வெள்ளம் பாதித்த தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் வெறும் கையோடு வந்து முழம் போடுகிறார்கள். வெள்ளம் பாதித்த பகுதியை மேம்படுத்த 37 ஆயிரம் கோடி நிதி கேட்டோம். அதில் கொஞ்சம் கூட தரவில்லை. தர மறுத்த நீங்கள் அது பற்றிய கூச்சமே இல்லாமல் தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் எப்படி வருகிறீர்கள்?

தமிழ்நாடு கொடுக்கும் ஒரு ரூபாய்க்கு வெறும் 29 பைசா மட்டுமே வழங்குகிறது ஒன்றிய அரசு. '29 பைசா மோடி' தமிழ்நாட்டுக்குக் கொடுத்தது என்ன? சில திருக்குறள்களும் பாரதியார் கவிதைகளும் மட்டும் தானே!

நெல்லையில் 'அல்வா'வை நினைவூட்டி இருக்கிறீர்கள். பேரிடர் நிதியைக் கூட தரா மல் 'அல்வா' கொடுக்கும் மோடி ஆட்சிக்கு இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் 'அல்வா' கொடுப்பார்கள்.

இந்தியாவின் முன்னேற்றத்தைப் பேசுவதைவிட, 'இந்தியா' கூட்டணியின் முன்னேற்ற றத்தைக் கண்டு தாங்க முடியாமல் மணிக்கொரு முறை இந்தியா கூட்டணிக் கட்சிகளையும் அதன் தலைவர்களையும் விமர்சித்துக் கொண்டிருக்கிறார். "என்னுடைய சாதனைகளை அச்சிடவிடாமல் நாளிதழ்களைத் தமிழ்நாட்டில் உள்ள தி.மு.க அரசு தடுக்கிறது. மக்களிடம் சென்று அடையாமல் தொலைக்காட்சிகளையும் தமிழ்நாடு அரசு கட்டுப்படுத்துகிறது" எனப் பேசியிருக்கிறார் பிரதமர் மோடி. காலை, மாலை பேப்பர்களைப் படிக்கக்கூட உங்களுக்கு நேரமில்லையா பிரதமரே! அந்த தினசரிகளைக் கொஞ்சம் புரட்டி பாருங்கள். எல்லாத் தலைப்பு செய்திகளிலும் நீக்கமற நீங்கள் தான் நிரம்பியிருக்கிறீர்கள். நேரலை, விவாதங்கள், விறுவிறு செய்திகள், சிறப்புச் செய்திகள் எனத் தொலைக்காட்சிகள் முழுவதும் மோடி பற்றிய செய்திகளைத்தான் இரண்டு நாளும் வாசித்தன.

ஹிட்லராகவும் கோயபல்சாகவும் மோடி!

"நாளிதழ்களை, தொலைக்காட்சிகளைத் தி.மு.க. கட்டுப்படுத்துகிறது" என எப்படி வாய் கூசாமல் சொல்கிறீர்கள். பொய்களை சொல்லவும் ஏமாற்றத்தைத் தூண்ட வும் தான் பிரதமருக்கு அதிகாரம் தரப்படுகிறதா? மாநிலங்களை ஒடுக்குவதில் ஹிட்லராகவும், பொய்களைப் புனைவதில் கோயபல்ஸாகவும் என இரண்டுமாகவே ஆகிவிட்டார் அவர்.

"தமிழ்நாட்டைச் சேர்ந்த முருகனை ஒன்றிய அமைச்சராக்கி உள்ளோம்" எனப் பெருமைப்பட்டிருக்கிறார் பிரதமர் மோடி. காங்கிரஸ் தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஒன்றியத்தில் இருந்த போது தமிழ்நாட்டைச் சேர்ந்த நான், தயாநிதி மாறன், ஆ.இராசா, மு.க.அழகிரி, ப.சிதம்பரம், அன்புமணி, பழனிமாணிக்கம், ஜி.கே.வாசன், நெப்போலியன், மணிசங்கர் அய்யர், அர.வேலு, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், வேங்கடபதி, சுப்புலட்சுமி ஜெகதீசன், ரகுபதி என எவ்வளவு பேர் அமைச்சர்களாக இருந்தார்கள் என எண்ணிப் பாருங்கள்.

பொய் சொல்லும் மோடி!

இணை அமைச்சர் பொறுப்பில் முருகனை நியமித்துவிட்டு, பெருமை அடிக்காதீர்கள். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் கேபினேட் அமைச்சர்களாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த நான் உட்படப் பலர் நியமிக்கப்பட்டனர். அந்த வரலாற்றை எல்லாம் மறந்துவிட்டுப் பேசியிருக்கிறார் மோடி.

"மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு தராத ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது" என்கிற பொய்யைச் சொல்லியிருக்கிறார் பிரதமர் மோடி. ஜி.எஸ்.டி நிதி முதல் பேரிடர் நிதி வரை தராத ஒன்றிய அரசின் ஏமாற்று வேலையைத் திமுக தோலுரிப்பதால் "ஒன்றிய அரசுக்கு ஒத்துழைப்பு தராத ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது" எனப் பொய்யைச் சொல்லியிருக்கிறார்.

எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க இடம் கொடுத்தது தமிழ்நாடு அரசுதான். அமைக்காமல் ஏமாற்றியது யார்? மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளுக்கு அனுமதி கொடுக்காமலும், நிதி கொடுக்காமலும் ஏமாற்றுவது யார்?

தி.மு.க. ஒன்றிய அரசில் அங்கம் வகித்தபோது தமிழ்நாட்டில் கலைஞர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில்தான் 1,650 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமுகம் மதுரவாயல் இடையே பறக்கும் சாலைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டத்தை முடக்கினார். மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு அமைந்த பிறகு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகள் எடுத்துப் பணிகள் இப்போது நடந்து வருகின்றன. அத்தகைய தி.மு.க அரசின் மீதுதான் "ஒன்றிய அரசுக்கு ஒத்துழைப்பு தராத ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது" எனச் சொல்லியிருக்கிறார் பிரதமர் மோடி.

வரலாற்றில் நிமிர்ந்து நிற்கும் தி.மு.க. எனும் இமயமலை!

"தி.மு.க.வை இனிப் பார்க்க முடியாது. இனித் திமுக எங்குத் தேடினாலும் கிடைக்காது" எனச் சொல்லியிருக்கிறார் பிரதமர் மோடி. "தி.மு.க. அழிந்து போகும். தலைதூக்காது" என தி.மு.க. உருவான 1949ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை 74 ஆண்டு காலமாகப் பலர் பேசிக் கடந்து சென்று கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், தி.மு.க என்ற இமயமலை இன்றும் வரலாற்றில் நிமிர்ந்து நின்று கொண்டுதான் இருக்கிறது.

தி.மு.க.வையே இல்லாமல் ஆக்கிவிடுவாராம். சவால் விட்டுள்ளார். இப்படிச் சொன்னவர்கள் எல்லாம் வரலாற்றில் காணாமல் போய்விட்டார்கள். அந்த வரிசையில் அவரும் விரைவில் இணைந்துவிடத்தான் போகிறார் என்று எச்சரிக்கிறேன்.

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் - வளர்ந்த நாடுகளுக்கு இணையாக

சிந்திக்கிற முதன்மையான மாநிலம், தமிழ்நாடுதான்!

சென்னையில் 'காலநிலை உச்சி மாநாடு' தொடக்க விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, மார்ச் 1 -

சென்னை ஐ.டி.சி. கிராண்ட் சோழாவில் தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 2.0 நேற்று முன்தினம் தொடங்கி இரண்டு நாள் நடைபெறுகின்றது. இந்த காலநிலை உச்சி மாநாட்டை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் காலை தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் பேசியதாவது:

மாறிவரும் காலநிலையைக் கருத்தில்கொண்டு தமிழ்நாடு அரசு சார்பாக நடத்தப்படுகின்ற "தமிழ்நாடு காலநிலை உச்சி மாநாடு 2.0"வை தொடங்கிவைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை!

தமிழ்நாடு மட்டுமல்ல, இந்திய ஒன்றியம் மட்டுமல்ல, இன்றைக்கு ஒட்டுமொத்த உலக நாடுகளும் சந்திக்கின்ற ஒரு பிரச்சினை இந்தக் காலநிலை மாற்றம். இதை எதிர்கொள்ள அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஐ.நா.சபை போன்ற அமைப்புகள் பல்வேறு மாநாடுகள், கூட்டங்களை நடத்துகின்றன. இத்தகைய வளர்ந்த நாடுகளுக்கு இணையாகச் சிந்திக்கிற ஒரு மாநிலம், இந்தியாவில் இருக்கிறது என்றால், அது நமது தமிழ்நாடுதான்.

நமது முதலமைச்சரின் வழிநடத்துதல் தான் இந்தப் பெருமைக்குக் காரணம். இந்த மாநாட்டையும்கூட நமது முதலமைச்சரே நடத்தச் சொல்லி அறிவுறுத்தினார். சுற்றுச்சூழல் துறை என்று இருந்த அந்தத் துறையின் பெயரை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை என்றே மாற்றியவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

காலநிலை மாற்றத்தை பற்றிய புரிதலும், தொலைநோக்குச் சிந்தனையும் உள்ள தலைவராக நம் தலைவர் இருப்பதால்தான், இதுபோன்ற மாநாடுகள் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் மட்டும் நடத்தப்படுகின்றன. ஏனென்றால், இது எதிர்காலத் தலைமுறையினர் சம்பந்தப்பட்டது. காலநிலை மாற்றத்தால்தான் உலகத்தில் உயிர்கள் உருவானதாக அறிவியல் சொல்கின்றது. அதே காலநிலை மாற்றத்தால்தான் இன்று நம்முடைய சுற்றுச்சூழல் மிகப்பெரிய ஒரு கேள்விக்குறியாகவும் உள்ளது. இதனைச் சரி செய்ய வேண்டும்.

சுற்றுச்சூழல் சார்ந்த பாதிப் பிரச்சினைகளை நாமே தீர்த்து விடலாம்!

இந்த பூமி நம் வீடு. நமக்கு இந்த பூமி எப்படிக் கிடைத்ததோ, அதேபோல இந்த பூமியை நாம் அடுத்தத் தலைமுறைக்கும் பத்திரமாக விட்டுச் செல்ல வேண்டும். இதை உணர்வுப்பூர்வமாகவும், அறிவியல்பூர்வமாகவும் சொல்கின்றேன். காலையில் நாம் கொட்டுகின்ற குப்பையில் ஆரம்பித்து, வீட்டைப் பராமரிப்பது, சாலை உள்ளிட்ட இடங்களைத் தூய்மையாகப் பேணுவது என அக்கறையுடன் இருந்தாலே, சுற்றுச்சூழல் சார்ந்த பாதிப் பிரச்சினைகளை நாமே தீர்த்து விடலாம். இதையெல்லாம் எடுத்துச் சொல்லவே இந்த மாநாடு இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மிகவும் சரியான நேரத்தில் இந்த உச்சி மாநாட்டை நடத்தும் சுற்றுச்சூழல் துறை மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் மற்றும் காலநடைத் துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2021ஆம் ஆண்டு கழக ஆட்சி அமைந்த சில மாதங்களிலேயே காலநிலை மாற்றத்தில் இருந்து தமிழ்நாட்டைத் தற்காத்துக் கொள்ளவும், இயற்கை வளங்களை அதிகரிக்கவும் 5 திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

பசுமைத் தொன்மங்கள் திட்டம்

கடற்கரைகளுக்கான `The Blue Flag Program', `திறன்மிகு கிராமங்கள் திட்டம்', `பசுமை புத்தாய்வுத் திட்டம்', `பசுமைத் தொன்மங்கள் திட்டம்', `பசுமைப் பள்ளிகள் திட்டம்' என ஐந்து திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும் காலநிலை குறித்த பயிற்சி பயிலரங்கத்தையும் நமது திராவிட மாடல் அரசு, மாவட்டம்தோறும் நடத்தி வருகின்றது. சென்னையில் டிசம்பர் மாதம் மிக்ஜாம் புயலால் ஒரு மிகப்பெரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டினத்திலும், திருநெல்வேலியிலும் ஓர் ஆண்டில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் கொட்டித் தீர்த்தது. இன்னொருப் பக்கம் 2023ஆம் ஆண்டு, இதுவரை பதிவானதிலேயே மிக அதிக வெப்பமான ஆண்டு என உலக வானிலை அமைப்புத் தெரிவிக்கின்றது. இதற்கெல்லாம் காரணம் இந்தக் காலநிலை மாற்றம்தான்.

உலகெங்கிலும் இந்தக் காலநிலை மாற்றத்தை மக்கள் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தருணத்தில்தான் தமிழ்நாடு அரசு இந்த இரண்டாவது உச்சி மாநாட்டை ஒருங்கிணைத்துள்ளது. கடல் மட்ட உயர்வு, அதிகப்படியான மழை, வெள்ளம் போன்றவற்றால் கடலோரப் பகுதிகள் நேரடியாகப் பாதிப்படையும். இதனால் எல்லோரும் பாதிக்கப்படப் போகிறார்கள் என்றாலும், இதனால் அதிகம் பாதிக்கப்படுவது ஏழை மக்கள்தான் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2007ஆம் ஆண்டே கூறினார்.

இன்றைக்கு நம் அரசு இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையில், தமிழ்நாடு பசுமை காலநிலை நிறுவனத்தை (தமிழ்நாடு கிரீன் கிளைமேட் கம்பெனி) உருவாக்கியுள்ளது. அதன் செயல்பாட்டிற்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கிளைமேட் மிஷன், தமிழ்நாடு வெட்லன்ஸ் மிஷன், கிரீன் தமிழ்நாடு மிஷன் போன்ற இயக்கங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 10 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றைக் காலநிலை மீள் திறன் கொண்ட கிராமங்களாக மாற்றுவதற்கான திட்டம், அதேபோல் நீலகிரி, கோயம்புத்தூர், ராஜபாளையம் மற்றும் ராமேஸ்வரம் ஆகிய நகரங்களைக் கார்பன் சமநிலை கொண்டவையாக மாற்றுவதற்கான திட்டங்கள் என இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஈர நிலங்களைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான்

இந்தியாவிலேயே அதிகமான ராம்சார் அங்கீகாரம் பெற்ற ஈர நிலங்களைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான். 15 இடங்களுக்கான ராம்சார் அங்கீகாரத்தைக் கடந்த இரண்டரை ஆண்டுகளில் நாம் பெற்று இருக்கின்றோம்.

தமிழ்நாட்டின் பசுமைப் பரப்பை 33 விழுக்காட்டிற்கு மேல் அதிகரிக்க பசுமை தமிழ்நாடு இயக்கத்தைக் கழக அரசு செயல்படுத்தி வருகின்றது. இதன் மூலம் ஏழு கோடி மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. ஜியோ டேக்கிங் தொழில்நுட்பத்தின் மூலம் இவற்றின் பராமரிப்புப் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன. இந்தக் காலநிலை உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஒவ்வொருவரின் பெயரிலும் ஒரு மரக்கன்று எனும் அடிப்படையில் ஆயிரம் மரக்கன்றுகள் ஜெருசலேம் கல்லூரியில் நடப்பட்டுப் பராமரிக்கப்பட உள்ளன.

இதற்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் பசுமைச் சான்றிதழும் வழங்கப்பட உள்ளன. தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாடு பாதுகாப்புச் சிறப்புத் திட்டத்தையும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்கள். `மீண்டும் மஞ்சள் பை இயக்கம்' மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பலரும் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணியில் இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்று இங்கே கூறியிருக்கின் றார்கள்.

இதற்காக முதலமைச்ச ரின் பசுமைப் புத்தாய்வுத் திட்டத்தின் செயல்பாட்டில் உள்ளது. இந்தத் திட்டத்தில் பணியாற்றுகின்ற 40 பசுமைத் தோழர்கள் இங்கு வந்திருக்கிறீர்கள். உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்

கடற்கரை தூய்மையை உறுதி செய்ய ரூபாய் 1,675 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கத்தை, இன்று தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். இயற்கையை நேசிப்பதில் தமிழர்களுக்கு ஈடாக வேறு எவரும் இருக்க முடியாது. அப்படி இயற்கையோடு இணைந்த வாழ்வை வாழ்ந்தவர்கள்தான் நம்முடைய தமிழர்கள்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது என்பது தமிழ்நாடு அரசோ, திராவிட முன்னேற்றக் கழகமோ தனிப்பட்ட முறையில் செய்ய முடியாது. தமிழ்நாட்டு மக்கள், அரசியல் இயக்கங்கள், சமூக இயக்கங்கள், தொழிலாளர் அமைப்புகள், விவசாயிகள், வணிகர்கள், இளைஞர்கள் என அனைவரும் ஒன்றுபட்டு எதிர்கொள்ள வேண்டும். காலநிலையைச் சிறப்பாகக் கையாளும் முதன்மை மாநிலமாக நமது தமிழ்நாடு உருவாக வேண்டும். இதற்காக அனைவரும் ஓரணியில் நின்று உழைக்க இந்த உச்சி மாநாடு வழிவகைச் செய்யும் என்று நம்புகின்றேன். இந்த வாய்ப்பு அளித்த உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்த மாநாடு வெற்றிபெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த மாநாட்டு தொடக்க விழாவில், அமைச்சர்கள் சிவ.வீ.மெய்யநாதன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர்.எழிலன், தமிழ்நாடு புதுச்சேரி பிரிட்டிஷ் துணைத் தூதர் ஆலிவர் பால் ஹாட்செட், ஆற்றல், சுற்றுச்சூழல் மற்றும் நீர் சபையின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் அர்ணாப் கோஷ், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் அரசு கூடுதல் செயலர் சுப்ரியா சாஹூ ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் இயக்குநர் ஏ.ஆர்.ராகுல்நாத் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் மதிப்புமிகு உறுப்பினர்கள் மான்டெக் சிங் அலுவாலியா, எரிக் சோலிம், சௌமியா சுவாமிநாதன், சுந்தர்ராஜன், பேராசிரியர் ராமச்சந்திரன், பேராசிரியர் ரமேஷ் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பேராசிரியர் மா.இளஞ்செழியன்
மார்ச் 1 (2009)

தி.மு.க. தொடங்கப்பட்டபோது அமைக்கப்பட்ட பிரச்சாரக்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புகளில் கழகப் பணியாற்றியவர்.

தந்தை காஞ்சி மணிமொழியாருடன் இணைந்து 1947களில் 'போர்வாள்' சொந்தமாக நடத்தி, அதன் ஆசிரியராக செயல்பட்டவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் பேராசிரியராகவும், அதன்பின் கல்லூரி முதல்வராகவும் விளங்கிய இவர் 'தமிழன் தொடுத்த போர்', 'அறிஞர் அண்ணாதுரை', 'ஈரோட்டுப் பாதை' ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

இளஞ்செழியன் நடத்திய 'போர்வாள்' ஏடு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களின் கரங்களில் போர்வாளாகவே மின்னிக் கொண்டிருந்தது.

"இளஞ்செழியன் எழுதிய 'தமிழன் தொடுத்த போர்' என்கின்ற அந்த நூலும், இன்னமும் தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்புக்கு நமக்கெல்லாம் பக்க பலமாக இருக்கக்கூடிய ஒரு பெட்டகம் ஆகும்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.